ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

திருவல்லிக்கேணி

பார்த்தசாரதிப்பெருமாள்பேரிற் பலசரக்கு ஏலப்பாட்டு



1903

சென்னை சூளை தொட்டிக்கலை குமரப்ப
முதலிவீதி 2-10 வது நம்பர்.

பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலை.



பார்த்தசாரதிபெருமாள்.

உ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி

பார்த்தசாரதிப்பெருமாள்பேரிற்

பலசரக்கு

ஏலப்பாட்டு.

ஏலேலோ குருபாதம்-அம்பாள்-விநாயகனேமுன்னடவாய்-நான்முகன்றன் சரஸ்வதியே-எந்த-னாவினுள்ளேவாருமம்மா-சீர்பொழியுந் திருவல்லிக்கேணியெனும்-புரிதனிலே-வாசமாகவீற்றிருக்கும்-பார்த்தசாரதியுந்தேவியுடன்-வேதவல்லிதாயாருக்கு-கப்பல்காணிக்கைகள் வெகுவிதமாய்ப்பாரமுடன்சரக்குகட்டி-யோடிவருஞ்சம்மதிக்க.

(ஜரூர்.)

நாழிகையொன்றுக்குநாளூறுகப்பல்-நாடோறு

பலசரக்குஏலப்பாட்டு.

ந்தப்பாமல்தினம் வந்திறங்கும்-சீருடையபடித்துறை
க்குக் கப்பல்வருஞ்செய்தி - சென்னபட்டணங்கோ
ட்டைசெனங்களெல்லாங்கேட்டு- பூரித்துஆனந்தசந்
தோஷமாகப் புதுமைகள்பார்க்கவந்துகரை தனிலேநி
ற்க-பாரியவர்த்தகர்கள் செட்டிசோமுட்டி-பட்டண
த்திலுள்ள குடியின்னஞ்சிலபேர்கள்-வேணுமென்ற
சரக்குகள்வேணபடிகொள்ள - மாட்டத்தினில்பணங்
கொணர்ந்துவந்தவர்களிங்கே-போனபேர்பெற்றசெ
ன்னைபுரியாரும்-பெரியதுரை சின்னதுரையெல்லாரு
ங்கேட்டு-நாடாளும்இங்கிலீஷ்கொடிக் காரரெல்லாம்-
நாலாயிரஞ்செனங்கள்வந்துமேநிற்க - ஓடாத தண்ணீ
ரிலங்கர்கள்பாய்ச்சி-யொருபுறமாய்க் கப்பலெல்லாங்
கரை தனிலேசேர்க்க வேதவல்லித்தாயார்கடாக்ஷத்தி
னாலே-வேகமுடன்கப்பல்வந்துசேர்ந்ததுதயாசுவாமி
(ஏலேலோ.) (க)

பொங்கிவருங்கடலோரந்-தாயார்-பூமகளாஞ்சந்
நிதிக்கே-யங்களமாய்சரக்குக்கப்பல் இங்கே-வந்திறங்
கும்படித்துறைக்கு - நிரம்பிவருஞ்சரக்குகட்டி-நோ-
பாரத்துடன்கனத்துவரும்-தங்கிவரும் வழிதனிலே-
சற்றே-தாமதங்களில்லாமல்.

(ஜரூர்.)

எங்தெந்ததீவாந்தரத்திலிருந்து எண்ணிச்சொல்

லழியாத சரக்குகளைக்கொண்டு - பஞ்சவர்ணக்கிளி
கொஞ்சும்பங்காளதேசம் - பலவிதமாய் நெல்விளையு
ம்பால்வடியுஞ்சம்பாசிறுமணியும் பெருமணியுஞ்சிறு
ராசிநெல்லு-கொடிசம்பாமணக்கத்தைக் குங்குமச்ச
ம்பா-கொத்துமுத்துச்சம்பாகுடமல்லிச்சம்பா - மல்
லிகைச்சம்பாமணமுள்ளசம்பா - பங்காளதேசத்தில்
வால்நீண்டநெல்லு-அனுமந்தசம்பா அளவற்றசம்பா
அந்தந்ததேசத்தில்விளைந்துவரும்நெல்லு - கடுகுசம்
பாமிளகுகற்பூரசம்பா கன்னியரிசியுடன்கருப்புநெல்
லரிசிசோனைமழைபொழியும்நல்ல மலையாளதேசம்-
துள்வெள்ளைநெல்விளைதும்பைப்பூச்சம்பா - சசியமா
பர்வதத்தில்விளைந்துவருஞ்சம்பா - சமுத்திரத்தில்வி
ளைந்துவருஞ் சடைச்சம்பாநெல்லு-சர்தகோதாவரியி
ல்விளைந்துவருஞ்சம்பா-சதுரான்தேசத்தில் விளைந்து
வருஞ்சம்பா-கன்னியா குமரில்விளைந்துவரும்நெல்லு
ஸ்ரீரங்கராஜருக்குவிளைந்துவரும்நெல்லு - திருவாங்க
நாயகிக்குவிளைந்துவருஞ்சம்பா - செம்பாளைபூம்பாளை
சுகதாதிஅரிசி-கல்லுண்டை நெல்லுண்டைகார்போக
த்தரிசி-கட்டையரிசியுடன்கப்பலுளதினுசுமலைதுவ
ரைசிறுதுவரைகடலைபயறுளுந்து மற்றுமந்தகோதும்
பைநவதான்யஞ்சோளம்-கறிமஞ்சள் பொடிமஞ்சள்
காமுள்ளமஞ்சள்-கப்பமஞ்சள் சாயமஞ்சள் பங்கா
ளமஞ்சள்-மலைதேன்கள்சிறுதேன்கள் காட்டிலுள்ள
தேன்கள்-நல்லவாய்க்கிசைந்ததொரு திவாட்சிகளு

ம்-தேன்பாகுமணப்பாகுசீனைகற்கண்டு - சீனிசர்க்க
ரையோடுசேர்ந்தநல்லவெல்லம் - ஈச்சம்வெல்லம்பன
ங்கற்கண்டுஉள்ளிவெங்காயம்-காச்சிருக்கும் புளிச்சக்
கைநீரடிமுத்துக்கள் - களிப்பாக்கு சிறுபாக்குகல்யா
ணப்பாக்கு-கற்றக்காம்புகீல்வத்திகாட்டுகொம்பாக்கு
கம்மாருகச்சோடுவெற்றிலைகள்-நல்ல - கடல்முத்துசு
ண்ணும்புகாரமுள்ள புகையிலை-சீரகம்பெருங்காயம்ச
தகுப்பைஓமம்-சேர்ந்ததொருவெந்தயமும் கொத்தம
ல்லிவிரையும்-கடுகுகள்மிளகுகள்கழற்சிக்கா ஏலம்-க
டுக்காப்பூ சிறுலவங்கப்பட்டையொடுபத்திரி-சுக்குதி
ப்பிலிமோடிசெவியமொடுகோஷ்டம்-சடாமாஞ்சி அ
திமதுரம்கண்டுபாரங்கி-சிற்றரத்தை சிறுதேக்குசெந்
தூரம்தும்ராஷ்டகம் சிறுநாவல்பூவோடுகுரோசானிஓ
மம்-மற்றுமந்தவாய்விளங்கமராட்டியமொக்கு பாங்கி
சக்கைகருஞ்சீரகம் காட்டுசீரகம்-அதிமதுரலவங்கப்பூ
தாளி சப்பத்திரி - அக்ராகாரங்கள் கடுகுரோக
ணியும் - கற்பூரத்தினிசுகள் கட்டிசாம்பிராணி - கா
ரமுடன் மெழுகுகள் கட்டி குங்கிலியம் - வெ
ண்காரம்புலிகாரம் படிகாரம் நவாச்சாரம் - இந்
துப்பு பாலுப்பு சயிந்துப்புலவணங்கள் - துத்திநாக
த்தொடு செந்தூரம்பச்சை - சித்திரங்களெழுதந
ல்ல அரிதாரநீலம்-ஏலககாய்சாதிக்காய் வால்மிளகுல
வங்கம்-ஏற்றமுள்ளஜாபத்திரி ஜாதிக்காய்பட்டை-கு

ங்குமப்பூகஸ்தூரிகோரோசனங்கள் - குமுகுமென்று
வர்ச்சிக்கும்பச்சைகற்பூரம்-சந்தனக்கட்டையின் சட்
டங்கள்புனுகு-சலவைபன்னீர்கள் கதம்பப்பொடி அ
த்தர் பச்சிலைக்கிச்சிலிக்கிழங்குகள்பிள்ளைபரிமளம்வீ
சிவரும்கஸ்தூரிமஞ்சள் சந்தனத்தைலங்கள்சாம்பிரா
ணிவத்தி-சம்பங்கித்தயிலங்கள்கிலெண்ணெய் பிப்பா
ய்-ஸ்ரீகந்தம்அகில்கட்டைதேவதாரீகள் - தீவிலுள்ள
சரக்குகள் அபூருபவஸ்து-மலைவேர்கள்மலையாளசஞ்
சீவிநல்ல-நிலவேம்பு விஷமுஷ்டிவேம்புடனே சூர்ண
ம்-செத்தவரைப்பிழைப்பிக்குஞ் சஞ்சீவிமருந்து-வெ
ட்டுண்டகாயங்கள் ஒட்டநல்லமருந்து-வாழாதபெண்
களுக்குவாழ்வுதருமருந்து - மைந்தரில்லாமலடிக்குப்
பிள்ளைதரும்ருந்து-கூடாதஆணும்பெண்ணுங் கூட்டி
வைககுமருந்து-குற்றங்கள் குறைதீர்க்குங்குணமுள்
ளமருந்து-ஆணுடனேபெண்பிரிந்து அலைந்துகெட்ட
பேரை-ஆசையுடன்கூட்டிவைக்கும் அந்தரங்கமருந்து
தேசாந்தரமோடித்திகைகெட்டபேரை - சீக்கிரமாய்க்
கொண்டுவந்துசேர்க்குநல்லமருந்து - இத்தனைமருந்து
வகை இனிசொன்னதினுசு - இன்னமின்னசரக்குவ்
கை பேர்சொல்லக்கேளும்-பேர்சொல்லாசரக்குவகை
ஆயிரங்கோடி - பேர்செரல்லும்சாக்குவகைபதினாயி
ரங்கோடி-இத்தனை சரக்குவகை எடுத்துமேகட்டி - இ
சைவுடனேகப்பலெல்லா-மொருவழியேதள்ளி - பத்
திரமாய்வழிகளிலே தண்ணீரெல்லாந்தாண்டிபலசரக்

குக்கப்பல்வந்துசேர்ந்ததையாசுவாமி(ஏலோ.) (உ)

இன்னமின்னம்சரக்குவகை-நல்ல - ஏற்றமுள்ள கப்பலிலே எண்ணிசொல்லமுடியாது - கொஞ்சம்கு கூறுமுடன்சொல்லுகிறேன் - கப்பல்வருந்தினுசுகளை நம்மால் கணக்குசொல்லிமாளாது.

(ஐஞர்.)

பட்டுகள்தாபிதா பச்சைப்பட்டுமக்மல்-பங்காள தேசத்துபார்க்களாதுண்டு-சாதாராதுப்பட்டி சலவையு ருமால்கள் சரிகைநெய்த புடைவைகள் சாயமுள்ள தோம்பு-மெத்தைக்குத்தகுந்தநல்ல மேல்பட்டுசாலர் விதவிதமாய்ரவைபட்டுச் சல்லாவெண்சேலை-மேலுக் கழகானதொரு மாதளம்பூப்பட்டு-மக்காவில்வெண்ட ட்டுமைமைசெங்காப்புபங்காளப் பட்டுடன்பஞ்சவர் ணச்சேலை-அச்சமாய்க்கட்ட நல்லபசசைபீதாம்பரம்- ஆத்தூருபழவெற்காடுபாக்குவானச்சேலை - ஐதராபா த்ரில் தாட்டிபததிரிசேலை - மிஞ்சிமுடுக்கான தொரு செஞ்சத்துச்சேலை - மேலான மேற்கத்தி சேலத்துச் சேலை - கெண்டுகோட்டைச்சேலை கொண்டதொரு கோடி-கட்டாரிபட்டு பட்டார்வர்னச்சேலை-மேலானச

குட்டைக்குலுக்கி-கண்டமிதாரு புலியூரில்கொள்ளுந
ல்லசேலை-நிலையங்கிபாகைகள் நீண்டிருக்குங்குல்லா
நிசாருடன் பாவாடையுருமாலைச்சவுக்கம்-நடுக்கட்டுர
விக்கைகள்நாலுவிதம்சீட்டி-நார்மடியுமடிசஞ்சி மேதர்
ணைதக்குங்கித்தான்-ஜார்ஜிக்கும் சகலாத்து சன்னதாவ
ளையல்-சட்டமுடன்துப்பட்டி பர்க்களாரேக்கு - பார்
வைக்குமோகிக்கும் சீமைநூல்பட்டு - பட்டணத்
துப் பெண்களுக்கு வாங்கநல்லபுடவை - முத்துக
ள்கல்லுகள் முத்துரத்னக்கெம்பு-மோகனமாலைகளு
முத்துசரமாலை-நற்பவழம் சாதிலிங்கம்நாலுவிதப்பச்
சை-நவரத்னக்கல்லுகள் நாகரீகாவிக்கை-வச்சிரங்கள்
வைடூரிய மாணிக்கநீலம்-மஞ்சணிறங் கோமேதகம்பு
ட்பராகங்கள்-மலிந்தவிலை தருப்புகள் மாந்தாளிப்பச்
சை-மற்றுமந்தக் கப்பலிலே முத்துவந்த திலுசு
கோர்வை கொலுசுகளும் கையிலிடுமுத்து - கோடா
லுகோடிகல்லிழைத்தபாட்டில-அடுக்குவளை-தோள்வ
ளையல்அதுகுண்டுவங்கி-அழகானபாசிபந்து கையிலி
டுங்கொலுசு-கண்டசரஞ் சரப்பளிகள் கடல்முத்துமா
லை-கல்லிழைத்தபட்டயங்கழுத்திலிடுங்கண்டி ஆரங்க
ள்பதக்கங்கள் அட்டிகைகள்நல்ல-அதுகளுக்கு மே
லான மகரகண்டிகைகள்-காதுக்கு நிறைந்திருக்குங்க

த்திரிபாவளிகள்-கம்மலிடுஞ்சிமக்கிசரம் காதுக்கசை
வாளி - ஆணிமுத்து கல்லிழைத்த அடுக்கு மூக
குகம்பி-அழகான புலாக்கு அன்ன மூக்குத்தி-கலிக்
கத்துராகல்லிழைத்தகட்டியொடுபட்டம் காதுக்குநே
ரானதிருநெற்றிசுட்டி-சந்திரபிறைசூரியபிறை தலைநி
றைந்தசாமான்-தளதளெனக் காந்தியிடுந் தங்கஒட்டி
யாணம்-பாதசரம்சுருள்சொலுசு சிலம்பு தண்டைபா
ட்டில்-பத்துவிரல்மோதிரங்கள் மிஞ்சியுடன் மெட்டு
காதுக்குச் சவுக்களிகள் கல்லிழைத்த சோடி - க
ண்டசரப்பதக்கங்கள் முத்திரைசிகரயம்-கல்லிழைத்
தபெருங்கடுக்கன்மகரகுண்டலங்கள்-மண்டலத்துச்ச
னங்களுக்கு வாங்கநல்லநகைகள்-ஆபரண வகையெ
ல்லாமணியணியாய்வைத்து - அதற்கேற்றபெட்டிகள்
பூட்டுகள்சாவி மோராவராகன்கள்சாறைக்காசுமேலா
னசீமையார்முத்திரைகள்ரூபாய்-ஆதியிலே யுண்டா
னஸ்ரீராமர்மேடை - அதுகளைச் சார்ந்ததொருகாசு
பணந்துட்டுஅரக்குமுத்திரைவைத்து அடையாளங்க
ட்டி-அடையாளமாகவேகாசுபணமெல்லாம்-அந்தந்த
விடத்தில்பத்திரங்கள்பண்ணி-சிறுமுத்து பெருமுத்
து சிறாசிமுத்து - தூரத்தில் விளைந்துவருஞ் சுண்
டைக்காய்முத்து-பருத்தமுத்து பெருத்தமுத்து பவ

மூநிறமுத்து-பம்பாயிசீமையிலேவிளைந்துவருமுத்து-கடைந்தமுத்துஉருண்டமுத்து கட்டாணிமுத்து-கருங்கடலில் விளைந்து வரும் காந்தியுள்ள முத்து வாளிமுத்துநீலமுத்துவார்கடை முத்து-வையகத்துச் செனங்களுக்குவாங்கநல்லமுத்து-ஒட்டுமுத்து தந்தமுத்துசுட்டிமுத்துநல்ல-ஒப்பிலா மாணிக்கச் சிவாத்தினங்கள் - கோவர்த்தனகிரியில் வாங்கிவந்தமுத்து கோபாலகிருஷ்ணனுக்குச் சாத்தநல்லமுத்து-அயோத்தியாபுரியில் வாங்கிவந்தமுத்து-அபிராமலட்சுமணருக்குச்சாத்துநல்லமுத்து-காசிதேசத்தில்வாங்கிவந்தமுத்து-கனமானவர்த்தகர்கள்விலைமதித்தமுத்துபாதபுரி சீமையிலேவாரிவந்தவச்சிரம்-பலமானவர்த்தகர்கள்விலைமதித்தவச்சிரம்குடகுதேசத்தில்வாங்கிவந்தகெம்புகோடானவர்த்தகர்கள்விலைமதித்தகெம்பு டில்லிதேசத்தில் வாங்கிவந்த பச்சை-தேசத்து வர்த்தகர்கள்விலைமதித்தபச்சைநாலுதேசத்தில்வாங்கிவந்தரத்னம்-நகர்சென்னபட்டணத்துறைவந்திறங்க தங்கக்கட்டிவெள்ளிகட்டிதனிதனியாய்வரவே - தாம்பிரம் வெங்கலங்கள்பித்தளைத்தூராக்கள் இரும்புசட்டம்ஈயக்கட்டிஎழுகுகம்பிநல்ல - இதுகளைச் சார்ந்தநொருதண்ட வாளங்கள் - சீமைமண் சாடிகள் சின்ன

சின்னகுப்பிச்சாக்கள் வளையோடு பீங்கான்கள் கிண்
ணி-திராவகம்பிராந்திகள் சாராயப்பீப்பாய் - தனித்த
னியாயந்தந்த இடங்களிலேவைத்து-பச்சைகள் நீலம்
குளோப்புகண்ணாடி-பச்சையில் பெரிதான பனிநீரு
குப்பி-கண்ணாடி கதவுகள் கைப்பெட்டி மேசை-
கவுசிகள்குர்ச்சிகள்கட்டிலொடு தொட்டில்-மெத்தை
கள் திண்டுகள்பிள்ளை தலையணைகள்-விதவிதமாய்மேற்
கட்டு போகுந்துறைசாமான்-மெழுகுசீலை கூடாரம்
மேக்குகள்வேம்புவிதவிதமாய்ச்சீமைநாய் குல்லாக்க
ள்சொக்காய்அடுக்குவர்த்திமெழுக்குவர்த்தி அதற்கே
ற்றபீடங்கள்அலங்காரக்கூடங்கள்மெழுக்குவர்த்திரா
ந்தல்-ககனவிளக்கதிகோடிகாந்தியுள்ள விளக்கு-கண்
ணுகரு அழகானசகுண்டுவரிசை-சதுருக்கு அழகான
சாயபொம்மைகளும்-சார்ந்திருக்கத்திண்டுகள்சரிகை
மேற்கட்டு-தங்கமொடுவெள்ளித்தட்டு தாம்பாளம்-ச
துருக்குஏற்றதொருசாதிக்காய்கிராம்புவால்மிளகுலவ
ங்கமொடுவண்ணமுள்ளபெட்டி-வெற்றிலை மடித்து
நோக்கும்வெள்ளியிர்க்குகளும்-விதம்விதமாய்ப்பனி
நீருகுப்பியொடுகிண்ணிபட்டுப்பாய் பிரப்பம்பாய்படு
த்திருக்கும்பாலிப்பாய்-பட்டணத்துத்துரைகளுக்குக்
கெட்டித்தாழம்பாய்-பட்டுரத்னக் கம்பளிகள்-சோடு

சமக்காளம்-பந்தலுக்கேற்றதொரு மட்டப்பிரப்பம்பாய்-கண்ணாடி சாம்பிராக்கள் கட்டில்கள் சோபாய் காட்டினிலேயுள்ளகலைமான்கள்கொம்பு கருத்திருக்குஞ்சவுரிநல்ல வெண்சாமரங்கள்-கிருஷ்ணாசலப் பட்டைபுலித்தோல்கள் நல்ல-உட்கார்ந்துசெபம்பண்ணும் சித்திராசனங்கள்-பட்டுக்குடைவெள்ளிக்குடைபச்சைக்குடைநீலம்-பவளக்குடை முத்துக்குடை தங்கக்குடைவெள்ளை வீதிவரும்பாவாடைவெள்ளித்தடிகள்வேடிக்கையாகவேகப்பலில்வரவே தாளிப்பனைஓலைகள்சிமைகடுதாசி பேனாக்கள்இங்கிபுட்டிபிரப்பந்தட்டு பீங்கான் - கோழிகள்சேவல்கள் சுவடிபலகறைகள்-சிறுராசிபெருராசிஆடுபலகறைகள் சங்குகள்பாவாடைசரக்குபித்தளைகள்-சட்டமாய்க்கப்பலிலேதிட்டமாய்க்கட்டி-அட்டலட்சுமிபொழியும் ஆனந்தகப்பல் அளவற்றபாக்கியங்கள்குறைவற்றசெல்வம்-நித்தியலட்சுமிபொழியுந்திருவல்லிக்கேணி-நினைத்தவரம்கொடுப்பாளந்த வேதவல்லித்தாயார்-இட்டமுள்ள லட்சுமிகடாட்சத்தினாலே-ஏற்றமுள்ளகப்பல்வந்துசேர்ந்ததையாசுவாமி(ஏலேலோ) (௩)

தார்குழலாள்கப்பலிலே-நல்ல-சஞ்சீவி மருந்துவகை-வையகத்துசனங்களுக்கு நல்ல-வியாதியறுமரு

ந்துவகை-பூமியிலே சனங்களுக்கு-நல்ல-பொன்னாரு
ம் இலைதினுசு.

ஜரூர்.

பேரானரசவாதப்பச்சிலைகள்தினுசு-பெருவியா
திரோகமறுஞ் சஞ்சீவிமருந்து-சயரோகந்திமிர்வாயுத
னூர்வாயுரோகம்கருமேகம்காமாலைமார்நோவுகுன்மம்
கண்குருடுசெவிடுகள்கால்மொண்டிமுடங்கள்-கண்கா
சபடலங்கள்வாங்குநல்லமருந்து மண்டையிடிதொண்
டைகட்டுமகத்தானரோகம்-மாளாதவியாதிகள் தீர்க்க
நல்லமருந்து-திக்குத்தெரியாது திசைகெட்டபேர்க்கு
த்திவியஞ்சனம்நல்ல சீமைமயிலங்கள்-தேசத்துச்சன
ங்களுக்குச்செயமுள்ளமருந்து தேசமெல்லாஞ்சுந்தர
மாயமுகுதருமருந்து உலகத்துச்செனங்களுக்குபகார
மருந்து ஒருநாளும்வியாதிகள்வாராதமருந்து-மனிதர்
க்குள்சீமையில்சொரணைகெட்டபேர்க்கு மதனகாமே
சுர அவிழ்தகஞ்சாக்கள்-குல்கந்துவில்வாதி லேகியங்க
ள்யாவும்-கீழ்நாடுமேல்நாடு பேர்பெற்றமருந்து-மருந்
துவகைதினுசெல்லாம்வகைவகையாய்வைத்து மற்று
மந்தகப்பலிலே ஆழமட்டுஞ்சாமான்-கதவுகுழையிரு
புசட்டம்கைப்பிடிகள்வளையம்-கட்டிலுக்குந் தொட்டி
லுக்குமூலசட்டசாமான்-தலைக்கடைகததவுகள் கைப்

பிடிக்குழைகள்-வைரத்தூண்கம்பங்கள் வெண்கலப்ப
ட்டங்கள் சாரங்கள் தயிலங்கள் சங்கிலிகள் குப்பி-தாழ்
வாரப்பெட்டிக்குநடுப்பூட்டுச்சாவி-காடைவிளக்குகள்
கைவிளக்குநல்ல-கலியாணப்பந்தலுக்கேற்ற குத்துவி
ளக்குதூங்காவிளக்குகள் தூங்குமலைகொலுசு-தொட்
டிலுக்குச்சங்கிலிகள்தோசைகல்லு அடுப்பு - மண்ணா
லுருவானவாணாய்காண்டி-மண்வெட்டிகள்நல்லவெட்
டுக்குந்தாலி பிஸ்தோல்துப்பாக்கிகள்பீரங்கிகுண்டுபல்
லயம்ஈட்டிகள்பாங்குகட்டாரி-கெடியாரமாணிக்கம்கு
ம்பினிரூபாய்கள்-கணக்குவகைதொகைசொல்ல இட்
டசம்பிரதிகள் ஆயுதங்கள்திரளானஅலைமான்துருப்பு
ஆழத்தின்மீனறியாச்சுகுழல்கொம்பு ஆனைகள்குதிரை
களாயிரம்காலாளாந்தோளிமேனாக்கள்பல்லக்குடோ
லிகேதாரங்கள்கூண்டுவண்டிசக்கரங்கள் சட்டம்-குதி
ரைகட்டுசாரட்டு தண்டிகைகளோடு-மான்களோடுமயி
லுகள்மாடப்புறாவுமைனாக்கள்பாத்துகள்பஞ்சவர்னக்
கிளிகள்-பால்கறக்கநல்லபசுக்களோடெருமை-பச்சை
வெண்ணெய்கடைந்தெடுக்க மாங்களோடுபற்றும்-சீ
மையெலிபெருச்சாளிசிறுத்தையோடு முயல்கள்-தே
வாங்குகருங்குரங்குசிறந்தபூனைகளும் செந்நாய்காடிசி
விங்கிகொண்டைமுயலும் சீமைநாய்வேட்டைநாயின்
ன்மின்னஞ்சாதிகடம்பைகளுடும்புகள்கோவேறுகழு
தை-கண்ணுக்குநிகரானநீர்மனுஷசாதிவிதவிதமாய்க்
கப்பலில்வேடிக்கையாகவேகமுடன்கப்பலிலேவிசை

யோட்டம்வரவே-சிறுமீன்கள்பெருமீன்கள்சிதறியங் கேயோட-மலைபோலமீன்களெல்லாம்வந்தங்கேநிறகு தவிட்டுமாதான்கலந்துசமைத்தகொழுக்கட்டை. தாம தங்களில்லாமலெடுத்துமுன்னேபோட்டு-அலை கடலி ல்வழியெல்லாம்ஒருநொடியில்தாண்டி ஆனந்தகப்பல் வந்துசேர்ந்ததையாசுவாமி(ஏலேலோ) (௪)

சங்கயமாபர்வதத்தில் நல்ல-சந்தனத்தால்சேர்த் தகப்பல்-மண்டலத்துசெனங்களுக்கு நல்ல மாளிகை க்குமாத்திறுசு-பட்டணத்துசெனங்களுக்குநல்லபல விதமாம்பழதிறுசு.

ஜரூர்.

சதுர்கட்குநதிரான எனுமிச்சம்பழங்கள்-சாதிநா த்தம்பழம்சர்க்கரையன்றுசிசெவ்வாழைப்பழக்குலை கள்சேர்ந்தாஸ்தானி செவ்விளநீர்சீமையத்திப்பழங்க ள்கிளிமூக்குமாம்பழம்பணியிலாக்கிச்சிலி-வகையான மாதளம்பழங்களொடுதிறுசுசீத்தாய் பலாபழம்சொ குசானசீனிசெடிநாரத்தைகொடிநாரத்தை சீமைகிச்சி லி-கொய்யாப்பழம்நல்ல கொத்துத்திராட்சி - கொ டியினில்மருவிவரும் காட்டு மாம்பழங்கள் - பேரீ

ச்சம்பழம்நல்லபருப்பு கற்கண்டு-பேரானகச்சூரிகாய்
களொடுதினுசு - பட்டாணி முந்திரிப் பருப்புகள்
தினுசு பழவகைகள்தினுசெல்லாம்விதம்விதமாய்வை
த்து-பங்காளகப்பலிலேபணியாரத்தினுசும்-தொட்டு
ப்பால்மனோகரம்தேன்குழல்பூரி துள்ளுமந்த அதிரச
ப் பாற்குழம்புலட்டு-சோமாசியென்பதுமேனியதுவா
கும் -தின்னும்வகைபலகாரமின்னமின்னங்கொண்டுச
கிபிண்டபிமனுக்குச்சர்க்கரை மிட்டாயும்-சாரமுள்ள
டாலன்னந்தயிர்வெண்ணெய்பாலும்-புளியோரைதத்
யான்னம்பொங்கல்வடைதோசைபோகமாய்அடிசில்
செய்யும் இட்டளிகள்நல்ல-சக்கரான்னங்களொடுமண
கோரையுண்டை-அக்காரவடிசில்கள் பங்காளபாத்து-
வேதவல்லித்தாயார்அடிசில்செய்யும்வகையைவிதவி
தமாயின்னதென்றுகணக்கிடப்போமோ-பார்த்தசார
திதேவியடிசில்செய்யும்வகையைபணியார மின்னதெ
ன்றுகணக்கிடப்போமோ-பணியாரவகைதினுசுபழதி
னுசுவகைகள்-பரிமளங்கள்வீசிவரும்புஷ்பவிதசாதி ச
ம்பங்கிபுஷ்பங்கள்சாதிமல்லிகைகள்-சரங்களொடுமா
லைகட்டிக்குருவேர்கள்தவனம்-பனிநீருபுஷ்பங்கள்பந்
திபுஷ்பங்கள் - பட்டு சாமந்திகள் பலவிதங்கள்
சல்தி-சண்பகப்பூநல்லசெங்கழுநீராம்பல் - சிறுச

ண்பகத்தோடுசேர்ந்தவனமாலி நீலவர்னப்புட்பங்கள் நீண்ட விருவாட்சி-மேலான சராபுன்னை முல்லை செந்தாமரை-புஷ்பவகைஆயிரங்கள்பொட்டணங்கள் கட்டி.-பேர்பெற்றகப்பலிலே இன்னமின்னந் தினுசு கல்தேக்குநல்தேக்குகாட்டி லுள்ளமரங்கள்-கரியோடு இரிவோடுகருப்புமரஞ்சாதி-வெண்தேக்குபூந்தேக்கு வெட்பாலைமரங்கள்-வேப்பமரம் நாவல்மரம் காட்டி லுப்பைமரங்கள்-சிறுவேங்கைபெருவேங்கை சிமை பனமரங்கள்-சோந்தரெதாரு வயிரங்களான நல்லபட் டை-மச்சுகட்டுமாளிகைக்கு அச்சுமட்டப்பலகைமத னகால்புள்ளிசட்டம்மாதிரிப்பலகை-குதிரை பட்டை குருவிக்கால்குத்துக்கால்சட்டம் கூடத்துக்கம்பங்கள் சாங்கனொடுதூலம்வெழல்கட்டுந்தாரங்கள்வாசற்கால் கதவு-மாளிகைக்குநல்லநல்லவகைவகையாய் மரங்கள் ஈடிகைகள்கவ்வாட்சிபலஆரைக்கதவுசிழமெத்தைமே ல்மெத்தைதாங்கு நல்லசரங்கள்-அலமாரிககதவுகளா ள்சுவுருக்கு மணைகள் - அழகானவிசுப்பலகை நாற்கா லிமணைகள்-மரங்கள்வகை தினுசெல்லாம் வகைவகை யாய்வைத்து-மகாகனமாய் கப்பலிலேவாத்தியங்கள் சோஷ்டம்-முகவீணை நாகசுரம் விருதுகள் பேரி மேளமொடுதாளங்கள்விருது சின்னங்கள் தாளமொடு

மத்தளம் சருவாத்தியங்கள் - இதுகளுக்கு மேலான
கிடுகிடுவாத்தியங்கள்-காளாஞ்சி துத்தாரி கனகதப்ப
ட்டை-புள்ளாங்குழல் நாதபிட்டில்வாத்தியங்கள்-பெ
ருகாளைஎக்காளைசாரங்கி வாத்தியம்-பாம்புநாகசுரம்ப
தினெட்டுவாத்தியம்-பாகவதகோஷ்டங்கள்சங்கீதகீர்
த்தனம்வீணையொடுசின்னங்கள்வேதார்த்தவேதியங்
கள்- தாம்தாமென்று கப்பலிலேசட்டமுடன் வாவே
அதிர்வேட்டுக்கில்புருசு ஆகாசபாணம்-அழகான மத்
தாப்பு ஐந்து தலை பாணம்-எரிபாணம் வெடிபாணம்
இடிபாணவித்தை-புட்பபாணம் நல்லகப்பல் பாண
ங்கள்-சுழல்பாணம்உழல்பாணம் சீறிவரும்பாணம்-சி
மையில்செய்துவரும்பலவிதபாணங்கள் கம்பபாணம்
நல்லகையில்விடும்பாணம்காந்தியுள்ளநட்சத்திரபாண
ங்கள்தினுசு-நீலவர்னபாணமொடு சூரியபாணங்கள் சீ
ரீயெனப்பேசிவரும் தவளைபாணங்கள் பாணவகைதி
னுசெல்லாம்பத்திரமாய்வைத்துபாங்கானகப்பலிலே
பலதேசச்சரக்குகொச்சிதேசம்நல்லகுடகுதேசங்கள்
கோபுரங்கள் வங்கணங்கள் கர்னூடுதேசம்-காஞ்சீபு
ரம்நல்லகாவேரிதீரம்-கண்ணூறுபாயும்நல்லசோழதே
சங்கள்-மலையாள மொடுமதுரை தெற்குதேசங்கள் த
ஞ்சையொடு திருநெல்வேலியொடுசீமை - மண்டலங்

கள் துண்டாரகாங்கள்தேசம் - குற்றாலம் குறநாடு கும்பகோணதேசம் கோதாவரிதீரம்கொண்டைகட்டி சீமை-ஏபாளம்நேபாளம்பங்காளதேசம் வாய்சொல் லுதெரியாதமாறுபாடிதேசம் இராச்சியத்தில்செழிப் புள்ள மைகுருதேசம்-நடுச்சோழமண்டலம் நாகரீகக் காஞ்சி-அங்கதேசம்நல்ல வங்கதேசங்கள்-அதுகட்கு மேலான இன்னமின்னந்தேசம்-காசிதேசம்நல்லகலிங் கதேசங்கள்-கண்ணூறுபாயும்நல்லகல்கத்தாசிமைடில் லிதேசம்நல்லசிந்து தேசங்கள்திக்குதெரியாததொரு ராணி தேசங்கள்-தவறாத பரிநல்லகேதார புரமும்- வாரணகுருக்ஷேத்திர வடமதுரைபத்திரி-ரங்கரோத் தரிநல்லகண்டகோதிரம்-கீழ்நாடுமேல்நாடு-தென்னாடு தேசம்-பப்பளதேசத்தில்சாக்குகள்கொண்டுதிக்குதி க்கானகப்பலெல்லா மொருவழியாய்ச் சேர்ந்து-ஸ்ரீராம செயமென்றுஎழும்பியேகப்பல்-துடுப்புகளை நாட்டி யவாளசலங்களையொதுக்கிச்-சீர்பொழியும் கப்பல்வ ரும்செய்தியைகேட்டு-திக்குதிககுகள்தோறும் வே ட்டுகள்போட்டு-சிங்கக்கொடிகட்டிச் சிங்காரமாக-செ யமுள்ளகப்பல்வந்துசேர்ந்ததையாசுவாமி, (ஏலே)

உலகமெல்லாம்பெற்றெடுத்த-அம்பாள் உத்தமி

யாள்பத்தினியே-மகிமையுடன் தேசமெல்லாம்-வந்தருளுங்கப்பலிலே.

ஜரூர்.

மலையாளங்கோங்குடன் நிலைசேருமுடனே மைகுருகளத்தூருவக்தேமகிழ்ந்து கனமான கோயிலடியிளங்காடுநேரே-கண்டியூர் திருக்காடுபள்ளி செம்பலகைகோலமுள்ளதிருவையாறுதிருத்தாலூர் துறையூர்கொஞ்சும்பசும்பெதிர்கோயில் கஞ்சனகர் கண்டு-தன்னவன்மைகாவலுண்மையைப்பார்த்துதானுமாய்ப்பாய்மரம்மூன்றுபதினுறுநன்மையொன்றுந்தேனுலேசீனிக்கலப்பு-நற்பமுடன்சொற்பமாய்சொற்பமாய்ப்பாருதந்திரமதானநல்லதுப்பாக்கிஈட்டி-சிராய்நடுக்கட்டு சொருசுடனேகட்டி-தூங்குமஞ்சசப்ரமுடன் கட்டிஞற்காலி-அந்தந்ததேசத்துக்கதிபதிகளாகி-இஷ்டாங்கமாகக்கொண்டுசாஷ்டாங்கமாய்வாச்சே (சுருங்கச்சொல்லல்)பந்தியுடனேவந்து இங்கிலீசுபிரான்சு லாட்டுமேலாட்டுஅரைநாளைப்பூட்டுநீரின்மேல்நெருப்புகொண்டேபணிந்தொருபிரங்கிதீர்த்து-குமுகமுடன் கப்பலிதுசமுகநிறைகண்டு-தொண்டரெல்லாம்புகழும் வேதவல்லித்தாயார், துரிதமுள்ளகப்பலிது தப்பாமல் வருதப்பா(ஏலேலோ) (சு)

அதிபதியாள்அன்னக்கொடி அம்பாள் தருமநிதி புண்யவதி-அம்பாள்-கப்பல்கடலோட்டம் தத்தையா் அரைநொடியில்வருகுதிங்கே.

ஜரூர்.

அந்தியசோழமண்டலமதுகடந்து அந்தந்ததேவ
ஸ்தலங்களதுகண்டுகன்னல்மழைபொழியும் அகமாறு
வாதம்-கனத்ததொருநெல்விளையுமற்றுமுள்ளசீமைய
ல்வூருகப்பலிது ஆனந்தமாக-அன்புடனே சுற்றியல்
லோயெல்லைதுறைதாண்டி இருகாது கொப்புஇரட்டை
யொட்டியாணம்-இலட்சம்பொன் பெற்றதொரு பச்
சைவடங்கொண்டு-கொண்டுவந்தம்மனுகருக்கொடுத்
தேபணிந்து-கோலமுள்ளகப்பலுக்கு மேலும்வழிகா
ட்டி-சீலமுள்ளகப்பலிதுவழிகளெல்லாந் தாண்டிசெ
ன்னபட்டணத்துறைவந்துசேர்ந்ததையாசுவாமி (எ)
உததமியாள் வேதவல்லி-பத்தினியாள்கப்பலிது-
சித்தமுள்ளபட்டணத்தில் சேர்ந்ததென்றுதான்பாட

ஜரூர்.

உலகமாதாவேயுத்தமிகாமாட்சிஉமையவள்தன்
னருள்உத்தாரம்பெற்று-அமையுமிந்தக் கப்பலுக்குச்
சமயமதுபார்த்து-ஆகாரகண்டெடுத்து அத்தட்டில்
சேர்த்து-சீகாரம்கண்டெடுத்துச்சிக்கந்திருப்பிகாகார
கண்டெடுத்துக்கப்பிகயிற்கட்டி நமசிவாயம்கொண்டு
கங்கூரம்பாய்ச்சி, நாலுவேதத்தாற்பிரங்கியேற்றி அ
ட்டாட்சரத்திலேகாற்றுகளு[illegible]யும் அம்மனிடகப்ப

லிதுவித்தாரமாக அன்பாகக் கணபதியை முன்பாக வைத்து-அந்தமுடன்கப்பல்வந்துசேர்ந்ததை தயாசுவாமி (ஏலேலோ)

கப்பலென்றால்கப்பலிது-நல்ல-கனமுடையகப்பலிது-கப்பல்வரும்பருவதனால்சலங்கள்-கரைபுரண்டுகுமுளமிடும்-இருகரையும் நீர்பெருகி-தத்தையாஏகசலம்வழிந்திடுமாம்-வேதவல்லியதுவறிந்து-அம்மன் காவிரியையெச்சரித்தாள்.

ஜரூர்.

காவேரிதானறிந்து வேதவல்லித்தாய்மேல்கடாட்சம்வைத்துக்கப்பல்தனைத்துறைகொணர்ந்து சேர்க்க-கரைபுரண்டு காவேரிவெகுவெள்ளம்வரவே அம்மனிடதன் மகிமையாரறிவரென்று ஆதிரங்கர்சந்நிதிக்குப்பின்பாகவே தான் அலைவந்துமோதவேகரைதனிலே ஒதுக்கி-உத்தரபாரிசமொருபக்கந்திரும்பி ஓங்காரமாகவேயுருண்டமணல்வாரிசத்தமிட்டுத் தத்தளித்துத் தான்புரண்டுகப்பல் சதாகாலமம்மனை சிந்தைதனிலெண்ணி-வேதவல்லித்தாயாரைத்தியானமது பண்ணி-வேசமுடனிங்குவந்தகப்பலிதுகண்டீர் (ஏலேலோ)

வாழியவே வாழியவே-ரத்ன மகமேருவாழியவே ஈசுவரரும்பார்வதியும் தத்தையா இன்பமுடன்வாழியவே-மகாவிஷ்ணுலட்சுமியும்-கோவிந்தர் மண்டலத்தி

ல்வாழியவே-பிர்மாவும்-சரசுவதியும்-தந்தையா-பூமி
தனில்வாழியவே

ஜரூர்.

தேவேந்திரன் இந்திராணி தேவர்களும்வாழி-திரமுள்ளமுனிவர்களும்சித்தர்களும்வாழி முப்பத்துமுக்கோடிதேவர்களும்வாழி-முதலானநாரதரும்கிம்புருடர்வாழி-நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுமேவாழி-நலமுள்ளகருடகாந்தருவர்களும்வாழி விக்கினவிநாயகருநித்தமிகவாழி;வேலவரும்பத்தினிகளிருவர்களும்வாழி ஸ்ரீரங்கநாயகியும்ரங்கநாயகரும் - சீவகாரணராண பார்த்தசாரதியும்-சீரானவேதவல்லித் தாயாரும்வாழி மேலானசென்னபுரியாளுகின்ற துரைகள் மேன்மேலும்எந்நாளும்வாழிமிகவாழி சூப்ரீங்கோட்டிலுள்ள துரைகளெல்லாம்வாழி துருப்பெடுத்துவழக்கெடுக்கும்எல்லட்டும்வாழி இன்னஞ்சில தேசங்களையாளுகின்றராசர் இணையில்லாத செல்வங்கள்பெற்றுமவர்வாழி சீலமுள்ளகப்பல்கவிகற்றவர்கள்கேட்டோர் சிறப்பாய்ப்படிப்போர்கள்செயம்பெற்றுவாழிமேலான இந்தகதையச்சினிலிட்டோர்மென்மேலும்எந்நாளும்வாழிமிகவாழி(ஏலேலோ) (௰)

பலசாக்குவலப்பாட்டு முற்றிற்று.